பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 3-50

சுடர் 5 பிரமோதூத வருடம் புரட்டாதி மீ 03 உ. புதன்கிழமை (19-09-1990) ஹிஜ்ரி 1410 ஸபர் பிறை 29 கதிர் 199

# அரசாங்கத்தின் ஆதரவோடு படையினர் பயங்கரவாதம்!

## மன்னிப்புச் சபை குற்றச்சாட்டு

லண்டன், செப். 19

தமிழீழ விடுதலைப் புலிகளை ஒடுக்க அரச படையினர் புரியும் பயங்கரவாதச் செயல்களை இலங்கை அரசு முழு அளவில் ஆதரித்து செயற்படுத்தியிருக்கிறது.

—இவ்வாறு இலங்கை அரசு மீது சர்வதேச மன்னிப்புச் சபை குற்றம் சுமத்தியிருக்கிறது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் கடும் எதிர்ப்பைச் சமாளிக்க இலங்கை அரசுப்படைகள் வடக்கு – கிழக்கில் பொது மக்களை பயமுறுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளன என்றும் சர்வதேச மன்னிப்புச்சபை தனது அறிக்கை

(4 ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்புத்துறையில் திங்கள் குண்டு வீச்சு! 2 சிறுவர் பலி!!

யாழ்ப்பாணம், செப். 19

கொழும்புத்துறை உதயபுரத்தில் திங்கள் இரவு 7 மணி அளவில் இடம்பெற்ற பொம்மர் குண்டு வீச்சில் இரு சிறுவர்கள் பலியானார்கள். 13 பேர் காயம் அடைந்தனர். 4 வீடுகள் சேதம் அடைந்தன.

சம்பவதினம் வானத்தில் விமானச் சத்தம் கேட்டபோது இவர்கள் பதுங்கு குழியை நோக்கி ஓடினர் என்றும் —

அதற்கு முன்னர் விமானக் குண்டு நிலத்தில் வீழ்ந்து வெடித்தது என்றும் தெரிவிக்கப்பட்டது.

சம்பவத்தில் அருகருகே உள்ள இரண்டு குடும்பங்களைச் சேர்ந்தவர்களான முத்துலிங்கம் சுதன் [வயது 6], கனகசபை சுமன் [வயது 9] ஆகிய இரண்டு சிறுவர்களும் உயிரிழந்தனர்.

கொலஸ்ரிக்கா முத்துலிங்கம் [வயது 27], ஜெயகௌசல்யா முத்துலிங்கம் [வயது 8], கோசலா முத்துலிங்கம் [வயது 4], முத்துலிங்கம் மலரவன் [வயது 2], சோதி கனகசபை [வயது 32], ரதிமலர் கனகசபை [வயது 10],

[4 ஆம் பக்கம் பார்க்க]

## யாழ். பெருமாள்கோவிலடியில் பீரங்கி குண்டுக்கு பெண் பலி!

### மற்றும் அறுவர் காயமடைந்தனர்

யாழ்ப்பாணம், செப். 19

யாழ். நகர குடியிருப்புப் பகுதிகளை நோக்கி நேற்று மாலை 5 30 மணியளவில் பலத்த பீரங்கி மற்றும் ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

யாழ். பெருமாள் கோவிலுக்குச் சமீபமாக உள்ள யாழ். வீதியிலும் அடுத்தடுத்து இரு பீரங்கிக் குண்டுகள் விழுந்து வெடித்தன.

இந்தச் சம்பவத்தில் குடும்பப் பெண் ஒருவர் பலியானார். இவரது கணவன், மகன் மற்றும் நால்வர் காயமடைந்தனர்.

மரணமானவர் யாழ் வீதியைச் சேர்ந்த கமலாதேவி தியாகராசா [வயது 40] என்பவர் ஆவர்.

வேலன் தியாகராஜா [வயது 42], பேபிகீதா தியாகராஜா [வயது 20], வரதராசா மணிவண்ணன் [வயது 20], முடியப்பு நகுலேஸ்வரன் [வயது 22], செல்லையா ரூபன் [வயது 23], இரத்தினம் இரத்தினசிங்கம் [வயது20] ஆகியோரே காயமடைந்தவர்கள் ஆவர்.

சீனச்சாடை விமானம் குண்டு வீச்சு நடத்திக்கொண்டிருந்தபோதே இந்தப் பீரங்கித் தாக்குதலும் நடந்தது. அதேசமயம் நகரின் நாலாபுறங்களையும் நோக்கி ஷெல் தாக்குதல்களும் நடத்தப்பட்டன. (ஒ-15)

## ஊரடங்கு நீக்கப்பட்டும் ஹெலி வேட்டு ஓயவில்லை

யாழ்ப்பாணம், செப் 19

ஊரடங்குச் சட்டம் நீக்கப்பட்டு விட்டதாக நேற்றுக் காலை அறிவிக்கப்பட்ட பின்னரும் ஹெலி ஓயவில்லை. அது நேற்றும் பல பகுதிகளில் வேட்டுக்களைத் தீர்த்தது.

நல்லூர், முத்திரைச் சந்தை, செம்மணி, கல்வியங்காடு, திருநெல்வேலியிலும் மற்றும் ஏழாலைப் பகுதியிலும் ஹெலித் தாக்குதல்கள் இடம்பெற்றன.

இதேவேளை—

நேற்று முன்தினம் சொக்குவில் பகுதியில் சில இடங்களில் ஹெலியில் இருந்து கூழாங்கற்கள் வீசப்பட்டதாகவும் அறியவந்தது. (ஓ-6-143)

## நெல்லியடியில் விமானத் தாக்கு! 2 பேர் மரணம்! ஒருவர் படுகாயம்!!

யாழ்ப்பாணம், செப். 19

நெல்லியடியில் நேற்று விமானத் தாக்குதல் இடம்பெற்றது.

விமானத் தாக்குதலில் சிக்கி இரண்டு பேர் உயிரிழந்தனர். ஒருவர் படுகாயமுற்றார். மற்றும் சிலர் காயமுற்றனர்.

கரவெட்டி, கரணவாய் மேற்கைச் சேர்ந்த யோகேஸ்வரி [வயது 35], நெல்லியடி பட்டித் தெருவைச் சேர்ந்த எஸ். செல்லையா ஆகியோரே உயிரிழந்தவர்களாவர்.

ஆதிகோவிலடியைச்சேர்ந்த யோகராஜா [வயது 45] படுகாயமடைந்தார். [உ-5]

## இன்று பருத்தித்துறைக்கு வந்து சேரும் பொருள்கள்

யாழ்ப்பாணம், செப். 19

இன்று நண்பகல் பருத்தித்துறைக்கு வந்து சேரும் ''லங்காசிறி'' கப்பல் 900 மெட்ரிக் தொன் அரிசி, 600 மெட்ரிக் தொன் மா, 300 மெட்ரிக் தொன் பருப்பு, 500 மெட்ரிக் தொன் சீனி, 28 மெட்ரிக் தொன் லக்ஸ்பிறே, 6 மெட்ரிக் தொன் விட்டாஸ்பிறே, 6 மெட்ரிக் தொன் கொத்தமல்லி ஆகியவையும் சவர்க்காரம் போன்ற உணவு அல்லாத பொருள்கள் 50 மெட்ரிக் தொன்னும் எடுத்து வரப்படுகின்றன.

90 பரல் மண்ணெண்ணெய், 15 பரல் டீசல் ஆகியவையும் இக்கப்பலில் கொண்டு வரப்படுகின்றன.

மேலும் 215 தபால் பொதிகளும் இந்தக் கப்பலில் கொண்டு வரப்படுகின்றன. (உ-7)

## நேற்று பொதிகளும் குண்டுகளும்

யாழ்ப்பாணம், செப். 19

யாழ். நகரப் பகுதியில் நேற்றும் விமானக் குண்டு வீச்சு நடந்தது.

நண்பகலளவில் அவ்ரோ ஒன்று சில மணி நேரங்களாக அடுத்தடுத்து கோட்டைப்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## உள்ளூர் தபால் சேவை இன்று மீண்டும் ஆரம்பம்

### சுன்னாகம் தபாலகமும் இயங்கும்

சுன்னாகம் தபால் நிலையம் மீண்டும் இன்று முதல் இயங்கும் எனத் தெரியவருகின்றது.

உள்ளூர்த் தபால் சேவையும் இனறு முதல் ஆரம்பமாகும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

கடந்த வாரம் கொழும்பிலிருந்து கப்பலில் வந்த தபால் பொதிகளில் பலவும் ஊரடங்குச் சட்டத்தின் காரணமாக விநியோகிக்கப்படவில்லை.

அத்துடன் நாளை பருத்தித்துறைக்கு வரும் கப்பலிலும் தபால் பொதிகள் கொண்டு வரப்படவிருக்கின்றன.

இவை அனைத்தையும் சேர்த்து விநியோகிக்க வேண்டிய ஏற்பாடுகளை தபால் திணைக்களம் மேற்கொள்ளும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பதிவுத் தபால் விநியோகமும் நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. [உ-7]

## இராணுவம் 'கெடுபிடி' வவுனியாவில் அதிகரிப்பு

வவுனியா நகரத்தில் படையினரின் 'கெடுபிடி' அதிகரித்து வருகிறது.

நகரில் மக்கள் நடமாட்டம் அதிகரிப்பதைஅடுத்தே படையினரின் கெடுபிடியும் அதிகரித்து வருகிறது.

இதேவேளை வவுனியா நகருக்குச் சென்றுபொருள்களை வாங்கிவர வியாபாரிகளுக்கு விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடும் ஓரளவு நீக்கப்பட்டிருக்கிறது.

இதனால் இங்கிருந்து செல்லும் வியாபாரிகள் கோவில்குளத்தில் இயங்கிவந்த சந்தையில் பொருள்களைஎவ்வித தடையுமின்றி தாராளமாகக் கொள்வனவு செய்யக்கூடியதாக இருப்பதாக அங்கிருந்து வந்த வியாபாரிகள் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் ஒரு நாளில் மட்டும் வவுனியாவிலிருந்து மா, சீனி, அரிசி, சவர்க்காரம் போன்ற பொருள்களுடன் ஐந்துக்கும் மேற்பட்ட லொறிகள் யாழ்ப்பாணம் வந்துசேர்ந்தன. (உ-6)

## கோட்டையில் இரு பொலிஸார் உயிரிழப்பு

கொழும்பு, செப். 19

யாழ்ப்பாணம் கோட்டை முகாம் மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதல் ஒன்றில் இரண்டு பொலி[illegible] என்று கொழும்பில் தெரிவிக்கப்பட்டது. [ஒ-எ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உணவுப் பொருள்கள் ஏற்றி வந்த வாகனம் ஷெல்லினால் தீப்பிடித்தது

## வவுனியாவில் சம்பவம்

யாழ்ப்பாணம், செப் 19

உணவுப் பொருள்களை ஏற்றி வந்த வாகனம் ஒன்று ஸ்ரீலங்கா இராணுவத்தினரின் ஷெல் தாக்குதலால் தீப்பற்றி எரிந்து நாசமானது.

சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:

கொழும்பிலிருந்து உணவுப் பொருள்களை ஏற்றிக் கொண்டு 'டெலிக்கா' வான் ஒன்று வந்து கொண்டிருந்தது வவுனியா காமினி வித்தியாலய இராணுவ முகாமை வாகனம் அண்மித்த வேளையில் வாகனம் பாதை மாறி முகாம் பகுதியில் தடை செய்யப்பட்ட பகுதியினுள் பிரவேசித்து விட்டது.

இதனைக் கண்ட படையினர் வாகனத்தை நோக்கி ஷெல் தாக்குதலை மேற்கொண்டனர். இதனால்வாகனம் தீப்பற்றி எரிந்து அதிலிருந்த உணவுப் பொருள்களும் நாசமாகின.

சாரதியும் கிளீனரும் வாகனத்திலிருந்து பாய்ந்ததால் உயிர் தப்பிக் கொண்டனர். இச்சம்பவம் கடந்த வாரம் இடம் பெற்றது.

[இ-6]

## இலங்கைக்கு சிமெந்து

சென்னை, செப். 19

தூத்துக்குடி துறைமுகத்தில் இருந்து இலங்கைக்கு சிமெந்து ஏற்றுமதி செய்யப்படுவது அதிகரித்து இருப்பதாக சென்னையில் தெரிவிக்கப்பட்டது.

கடந்த ஜூலை மாதத்தில் 1,507 தொன் சிமெந்தும் ஆகஸ்ட் மாதத்தில் 3.640 தொன் சிமெந்தும் தூத்துக்குடித்துறைமுகத்தில் இருந்து கொழும்புக்கு ஏற்றுமதி செய்யப்பட்டதாக கூறப்பட்டது.

[இ-எ]

## அமெ. விமானப்படை தளபதி நீக்கம்

வாஷிங்டன், செப். 19

அமெரிக்க விமானப்படைத் தளபதி ஜெனரல் மைக்கல் டூபின் பதவி நீக்கம் செய்யப்பட்டார்.

யுத்தம் ஒன்றுவரின் ஈராக்கில் ஜனாதிபதி சதாம் ஹுசேன் வசிக்கும் பகுதியை மையமாக வைத்து விமானக் குண்டு வீச்சுத் தாக்குதல் நடத்துவதே அமெரிக்காவின் பிரதான நடவடிக்கையாக இருக்கும் என்று 'வாஷிங்டன் போஸ்ட்' பத்திரிகைக்கு ஜெனரல் டூபின் தெரிவித்திருந்தார். இந்த யுத்த இரகசியத்தை வெளியிட்டதற்காகவே, அவர் பதவி நீக்கம் செய்யப்பட்டார் என அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் ரிச்சர்ட் சேனி தெரிவித்தார்.

[இ-எ]

## திருட்டு

யாழ்ப்பாணம், செப். 19

யாழ். பிறவுண் வீதியில் ஒருவரின் வீட்டில் பெறுமதி வாய்ந்த பொருள்கள் திருடப்பட்டுள்ளன. கடந்த சனிக்கிழமை இச்சம்பவம் இடம்பெற்றது. [இ-7]

## வதந்தியால் மக்கள் கிலி: ஒருவர் சைக்கிளை இழந்தார்

கொழும்புத்துறை, செப். 19

பீரங்கிப் படகுகள் மூலம் ஸ்ரீலங்கா இராணுவம் வந்து கடலால் நடந்து வருவதாகக் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு பதினொரு மணி அளவில் கொழும்புத்துறையில் பரப்பப்பட்ட வதந்தியால் மக்கள் பெரும் பதற்றம் அடைந்தனர் பலர் தமது இனத்தவர், அயலவர் படலைகளில் தட்டி இத் தகவலைத் தெரிவித்ததும் சூட்கேஸ், பொட்டலங்களுடன் ஆலயங்களைத் தேடி ஓடினர். இப்படி இரவோடிரவாக ஆலயத்துக்கு வந்தவர்களில் ஒருவர் தமது சைக்கிளைப் பறி கொடுத்தார்.

கொழும்புத்துறை கிழக்கைச் சேர்ந்த இவர் தமது மனைவி பிள்ளைகளை சைக்கிளில் ஆலயத்துக்குக் கூட்டி வந்தார் திரும்பி வந்து சைக்கிளைப் பார்த்த போது அது காணாமற் போய் இருந்தது.

இராணுவம் வருவதாக கடந்த ஞாயிற்றுக்கிழமை பின்னேரம் உடுவில், மானிப்பாய், ஆனைக்கோட்டைப் பகுதிகளிலும் வதந்தி பரவி இருந்தது குறிப்பிடத்தக்கது.

(இ-30)

## சின்னஞ்சிறு விளம்பரம்

### அறிவித்தல்

விக்ரேஸ், நியூ விக்ரேஸ், விச்ரர் அன்சன்ஸ் ஸ்தாபனங்களில் திருத்தக் கொடுத்த பொருட்கள் யாவும் பாதுகாப்பான இடத்திற்கு மாற்றப்பட்டுள்ளன. வாடிக்கையாளர்கள், விரும்பினால் கீழ் காணும் முகவரியில்தொடர்பு கொள்ளலாம். 887, ஆஸ்பத்திரி வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். (14219)

### காணவில்லை

மிகவும் அன்புடன் வளர்க்கப்பட்ட சாம்பல் நிற பொமனேரியன் பெண் நாய்க்குட்டி காணாமல் போய் விட்டது. தயவுசெய்து காண்பவர்கள் சிரமத்தைப் பாராமல் கீழ்க்காணும் முகவரிக்கு அறியத் தரவும். சன்மானம் தரப்படும். 887, ஆஸ்பத்திரி வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம். (14220)

### ''நிலவே நீ மயங்காதே''

மீரா வெளியீடு 'இந்திரா பிரியதர்ஷனி'' எழுதியது தவிக்கும் பெண்மனம் தடுமாறும் பெண்மனம், செய்வதறியாது திகைக்கும் பெண் மனம் இப்படிப் பல பெண் மனங்களை இந்நாவலில்சந்தியுங்கள்: ரூபா 40/- விற்பனையாகின்றது துர்க்கா ஸ்ரேசனேர்ஸ், சுன்னாகம், ஸ்ரீகாந் புத்தகசாலை, நல்லூர். [14218]

### போட்டோஸ்ரற்

போட்டோஸ்ரற் பிரதிகளை பெற்றுக் கொள்ளகிளீன் கட். 37, சிவகுருநாதன் வீதி, பிறவுண் வீதி யாழ்ப்பாணம். வேலை நேரம் 10 மணி முதல் 3 மணி வரை. [14216]

### இடமாற்றம்

அரஸ் ஜவுளியகம் இல: 146 நவீன சந்தை, யாழ்ப்பாணம் மண்டேலா ரேடர் (புத்தகசாலை) இல, 2. பஸ்நிலையம் ஆஸ்பத்திரிவீதி யாழ்ப்பாணம் ஆகியன தற்போது இல, 256, பருத்தித்துறை வீதி, (நல்லூர் தேரடி முன்பாக) நல்லூர் யாழ்ப்பாணம் என்ற முகவரியில் இயங்குகின்றன என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம். [13938]

### வகுப்புக்கள்

Toefl வகுப்புக்கள் Ere, Sat வகுப்புக்கள் Spoken English வகுப்புக்கள் ஆரம்பம் நேரடித் தொடர்பு கொள்க: ஆசிரியர் S B. Iyar 22, சேர்ச் லேன், முதலி கோவிலடி. கொக்குவில் மேற்கு, கொக்குவில். [14213]

### RATHY WATCH WORKS

மேற்படி ஸ்தாபனம் 12, பொன்னையா லேன் (உப தபால் நிலைய அருகாமையில் பிடாரி கோவிலடி) ஆறுகால் மடம் ஆனைக்கோட்டை யாழ்ப்பாணம் என்ற விலாசத்தில் இயங்குகிறது என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகிறோம். இங்கு திருத்த வேலைகள் மணிக்கூடு பற்றறி, விற்பனைகள் நடைபெறுகின்றது என்பதையும் அறியத்தருகிறோம். [13937]

### பெரியார் பிறந்ததினம்

சென்னை, செப். 19

தந்தை பெரியார் ஈவெராவின் 112 ஆவது பிறந்த தினம் திங்களன்று தமிழகம் முழுவதும் கொண்டாடப்பட்டது. (இ - எ)

### அறிவித்தல்

உதயன் பத்திரிகையில் மரண அறிவித்தலைப் பிரசுரிக்கக் கொண்டு வருபவர்கள் தமது அடையாள அட்டையை அல்லது தமது பகுதி உதவி அரச அதிபர், கிராம சேவையாளர், உதயன் பத்திரிகை முகவர், உதயன் செய்தியாளர் ஆகியோரில் ஒருவரிடமிருந்தோ அல்லது தமது பகுதி முக்கிய பிரமுகர் ஒருவரிடமிருந்தோ அத்தாட்சிக் கடிதத்தைக் கொண்டு வரும்படி கேட்டுக் கொள்கிறோம்.

முகாமையாளர்,
உதயன்.

### பத்திரிகை விநியோகஸ்தர்களுக்கு ஓர் அறிவித்தல்

யாழ். மாநகரசபை எல்லைக்குள் பத்திரிகை விற்பனை செய்ய விரும்புவோர் நேரடியாக உதயன் பணிமனையுடன் தொடர்பு கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம்.

முகாமையாளர்,
உதயன்.

### ஓராண்டு நினைவஞ்சலி



**திரு. குழந்தைவேலு சபாரத்தினம்**
(ஓய்வு பெற்ற அதிபர்)

தோற்றம்: 03 - 05 - 1916
மறைவு: 30 - 09 - 1989

திதி: 19 — 09 — 1990

எம் உயிருக்கும் மேலான அன்புத் தந்தையே! எங்களை விட்டுப் பிரிந்து ஓராண்டு சென்றாலும் உங்கள் நினைவுகள் எங்கள் நெஞ்சங்களில் என்றுமே அகலாது. தங்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
உற்றார், உறவினர்.

ஸ்ரேசன் றோட்,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில். [14212]

## மரண அறிவித்தல்கள்

### திருமதி பாறுவதிப்பிள்ளை [பாக்கியம்] கிருஷ்ணபிள்ளை

புலோலி தெற்கைச் சேர்ந்த திருமதி பாறுவதிப் பிள்ளை (பாக்கியம்) கிருஷ்ணபிள்ளை 13 - 09 - 90ல் காலமானார். இவர் கிருஷ்ணபிள்ளையின் அன்பு மனைவியும், பரமேஸ்வரன், தேவேஸ்வரி, தேவகி (ஆசிரியை புலோலி மெதடிஸ்தமிஷன் த.க பாடசாலை) ஆகியோரின் அருமைத் தாயாருமாவார். அன்னாரது பூதவுடல் 14 - 09 - 90ல் கருகம்பன் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்.

புலோலி தெற்கு,
புலோலி. (14221)

### திருமதி சோமேந்திரராணி சண்முகமூர்த்தி (J. P.)

(இளைப்பாறிய பொதுமுகாமையாளர் சட்ட ஆலோசகர் மக்கள் வங்கி தலைமைக் காரியாலயம் கொழும்பு)

அன்னார் கொழும்பில் காலமானார்.

இவர் இளைப்பாறிய உதவி பொது முகாமையாளர் மக்கள் வங்கி தலைமைக் காரியாலயம் கொழும்பு, திரு. துரைச்சாமி சண்முகமூர்த்தி அவர்களின் அன்பு மனைவியும், வண்ணார்பண்ணையைச் சேர்ந்த சட்டத்தரணி திரு. C C சோமசேகரம் [J P U M] திருமதி இராசம்மா அவர்களின் கனிஷ்ட புல்வியுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 17 - 09 - 90 திங்கட்கிழமை 23, கிளென் ஆபர்ஸ் [Glen Abers] வீதி பம்பலப்பிட்டியில் உள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்றது என்பதை நண்பர்கள், உறவினர்களுக்கு அறியத்தருகிறோம்.

தகவல்:
சி. சி. சோமசேகரம் (J. P. U.M)

வண்ணார்பண்ணை. [14223]

### செல்வன் க. கார்த்திபன்

கந்தசமித்துரை ரதி தம்பதிகளின் செல்வப் புதல்வன் கார்த்திபன் 13 - 09 - 90 அன்று பொலிகண்டி ஆலடியில் இடம் பெற்ற விமானத் தாக்குதலில் அகால மரணமானார் என்பதை உறவினர்களுக்கு அறியத் தருகின்றோம்.

தகவல்:
வே. விசுவலிங்கம்
(பெரிய தந்தை)

இன்பருட்டி,
பொலிகண்டி. [14222]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## ஊரடங்கு என்ற பொறி!

யுத்தம் நடக்கும் பிரதேசத்தில் பொதுமக்கள் நடமாடுவதைத் தவிர்ப்பதற்காகவே பொதுவாக ஊரடங்கு பிறப்பிக்கப்படுவது உண்டு. பொதுமக்கள் வீணாகப் பலியாவதைத் தடுப்பதற்காக அவர்களின் பாதுகாப்புக் கருதியே, நலன் கருதியே, ஊரடங்கு பிறப்பிக்கப்படும் விதிமுறை நடைமுறைக்கு வந்தது

அதன் நிமித்தம் ஊரடங்கு தக்க முன்னறிவித்தலுடன் அமுலுக்குக் கொண்டுவரப்படுவதே வழக்கம். அதுபோலவே ஊரடங்கு நீக்கப்படும்போதும் மக்களுக்குத் தெளிவான அறிவிப்புச் செய்யப்படுவது உண்டு.

ஆனால் வடக்கு - கிழக்கில் நடக்கும் யுத்தத்தில், ஊரடங்கு அமுல் செய்யப்படும் போது உரிய முறையில், போதிய முன்னறிவித்தலுடன் நடைமுறைப்படுத்தப்படுவதில்லை. படையினர் தாம் நினைத்த நேரத்தில் வானத்திலிருந்து ஊரடங்கு அறிவித்தல் துண்டுப்பிரசுரங்கள்சிலவற்றைப் போடுவார்கள். ஆனால் சம்பந்தப்பட்ட பகுதி மக்கள் எல்லோரையும் அந்தத் தகவல் எட்டியதா இல்லையா என்பதைப்பற்றி அவர்களுக்கு அக்கறையில்லை

மக்கள் தமது அன்றாடத் தேவைகளை நிறைவேற்றும் பொருட்டு வெளியில் நடமாடியதும் அவர்களை ஹெலியால் சுட்டுக் கொல்வார்கள். தமிழர்களின் உயிரைப் பாதுகாப்பதில் அரச படையினருக்கு அக்கறை இல்லை என்பதையே அவர்கள் அதன் மூலம் அப்பட்டமாகக் காட்டுகிறார்கள்! மொத்தத்தில் முறைகேடான ஊரடங்கு தமிழ் மக்களை மறைமுகமாகக் கொல்வதற்கான ஒருபொறி அதனை நேரத்துக்கு நேரம் மாற்றுவது அரசின் புதிய சதி.

யாழ்ப்பாணம்''உதவி அரசாங்க அதிபர் பிரிவில் நாளை (18ஆம்திகதி)காலை 6 மணி முதல் ஊரடங்குச் சட்டம் நீக்கப்படும் என்று பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது'' — என்றுஅரசின் 17ஆம் திகதியவானொலிச் செய்தி கூறியது.

தமிழ் மொழிபெயர்ப்பில் தவறு நடந்துவிட்டதாகச் சொல்லமுடியாதுஏனெனில் 17ம் திகதி இரவு வானொலி ஆங்கிலச் செய்தியிலும் Curfew will be lifted in the Jaffna A G A. division with effect from 6.a m tomorrow according to a communique issued by th defence ministry என்று அறிவிக்கப்பட்டது.

ஆனால் 18 ஆம் திகதி காலை வானொலிச் செய்தியிலோ—

''யாழ். குடாநாட்டில், யாழ். உதவி அரச அதிபர் பிர்வு தவிர்ந்த ஏனைய பகுதிகளில் இன்று காலை ஆறுமணி முதல் ஊரடங்குச் சட்டம் நீக்கப்பட்டிருக்கிறது'' என அறிவிக்கப்பட்டது.

இந்த முன்னுக்குப் பின் முரணான அறிவித்தல்கள் யாழ்ப்பாண மக்களை மரணப் பொறியில் சிக்க வைக்கும் சதி அன்றி வேறென்ன? இவற்றை வெறும் குளறுபடி என்று கூறமுடியாது.

இராணுவ நடவடிக்கைகள் (அழிப்புகள்), பொருளாதாரத் தடை என்பனவற்றைப் போலவே, ஊரடங்கு உத்தரவுகளும் தமிழ் மக்களுக்கு எதிரான இன ஒழிப்பு நடவடிக்கைகளில் ஒன்றாகிவிட்டது!

# மருந்து-உணவு பற்றாக்குறையால் முல்லைத்தீவில் மக்கள் பாதிப்பு

மாங்குளம், செப். 19

முல்லைத்தீவில் போதிய உணவு, மருந்துவகைகள் இல்லாததினாலும் சுகாதாரச் சீர்கேட்டினாலும் பச்சிளம் குழந்தைகள் முதல் முதியோர் வரை, உயிர் ஆபத்தை எதிர்நோக்கி உள்ளனர்.

இம் மாவட்டத்தில் வவுனியா, திருமலை, யாழ்ப்பாணம் அகதிகளும் தங்கி உள்ளனர்.

ஊரடங்கு தொடர்ச்சியாக அமுல் செய்யப்பட்டதால் இப்பகுதிக்கு உணவுப் பொருள்கள் வருவதில் தாமதம் ஏற்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. சிறுபோக நெல்லை பதனிட முடியாத நிலைமை இருப்பதும் உணவுத் தட்டுப்பாட்டுக்கு முக்கிய காரணம் என்று தெரிவிக்கப்படுகிறது.

புதுக்குடியிருப்புக்கும் முள்ளியவளைக்கும் ஓரளவு மருந்து வகைகள் வந்த போதிலும் ஒட்டுசுட்டான் நெடுங்கேணி ஆகிய வைத்தியசாலைகளில் மருந்துக்கு தட்டுப்பாடு நீடிக்கிறது. இதே வேளை மாங்குளம் முல்லைத்தீவு கேந்திர வைத்தியசாலைகள் நீண்ட நாட்களாக மூடப்பட்டுள்ளன

(இ-94)

## பூநகரியில் முதலுதவி பயிற்சி

பூநகரி, செப் 19

நல்லூர்- ஆலங்கேணி கிராம சேவையாளர் பிரிவுக்கு உட்பட்ட எவரெடி விளையாட்டுக் கழகத்தின் ஆதரவில் கிளிநொச்சி சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் முதலுதவிப் படையினரால் 60 க்கு மேற்பட்ட இளைஞர் யுவதிகளுக்கு செயல் முறை மூலமும் கற்பித்தல் மூலமும் முதலுதவிப் பயிற்சி அளிக்கப்படுகிறது. (இ)

## உணவு-மருந்து- எரிபொருள் தந்துதவக்கோரி மகஜர்

கொழும்புத்துறை, செப். 19

போதியளவு உணவுப் பொருள்களையும், மருந்து வகைகளையும், எரிபொருள்களையும் தருவிக்குமாறு கொழும்புத்துறை கிராம அபிவிருத்திச் சங்கமும், இந்து இளைஞர் மன்றமும் கூட்டாக மகஜர் ஒன்றை யாழ் பதில் அரசாங்க அதிபரிடம் கையளித்துள்ளன.

தினசரி உழைத்துச் சீவிப் போரும், மற்றும் ஏனைய அரச, கூட்டுத்தாபன, தனியார் ஊழியர்களும் பணம், மாதச் சம்பளங்களின்றி அல்லல்படுவதாகவும் —

தமிழ் மக்களை பட்டினிச் சாவிலிருந்து காப்பாற்றும் படியும் அம் மகஜரில் மேலும் கோரப்பட்டுள்ளது. (இ-30)

## மண்டைதீவிலுள்ள வயோதிபர் குறித்து தகவல் எதுவுமில்லை

யாழ்ப்பாணம், செப் 19.

மண்டைதீவுப் பகுதியில் இருந்து மக்கள்வெளியேற்றப்பட்டபோது, வெளியேற முடியாது அங்குசிக்கிய 40 வயோதிபர்களின் நிலை மர்மமாக இருப்பதாகக் கூறப்படுகிறது.

ஸ்ரீலங்கா இராணுவம் மண்டைதீவுக்குள் பிரவேசித்தவுடன் அங்குள்ள மக்களை வெளியேற்றியது.

அங்கிருந்த 40க்கு மேற்பட்ட வயோதிபர்கள் வெளியேற முடியாது அங்கேயே தங்கி இருந்தனர்.

அவர்களைச் சந்தித்து, அழைத்துவர அவர்களின் உறவினர்கள் படையினரிடம் அனுமதி கேட்டபோது படையினர் மறுப்புத் தெரிவித்துள்ளனர்.

அவர்களின் நிலை தெரியாது அவர்களது உறவினர்கள் மண்கும்பான் அகதிகள் முகாமில் தங்கியுள்ளனர். [இ - 3]

## உணவுப்பொருள்

வட்டுக்கோட்டை, செப். 19

காரைநகரிலிருந்து இடம் பெயர்ந்த அகதிகளுக்கு தொல்புரம் போரூட் நிறுவனத்தினரால் இலவசமாக உணவுப் பொருள்கள் சித்தங்கேணி அ. மெ. மி. த. க பாடசாலையில் வைத்து வழங்கப்பட்டன. [இ-161]

## கொத்தணி அதிபர் கூட்டம்

சாவகச்சேரி, செப். 19

சாவகச்சேரி கல்விக் கோட்ட கொத்தணி அதிபர்களுக்கான கூட்டம் ஒன்று கோட்டக் கல்வி அலுவலகத்தில் நடைபெற்றது உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. தனஞ்செயனால் ஏற்பாடு செய்யப்பட்ட இக் கூட்டத்தில் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் பற்றிய விவரங்கள் திரட்டப்பட்டதுடன் பாடசாலைகளின் விவசாய உற்பத்தி விஸ்தரிப்புப் பற்றிய கருத்துப் பரிமாறல்களும் இடம்பெற்றன. (இ-31)

## வவுனியாவில் மீண்டும் ஷெல் தாக்கு

யாழ்ப்பாணம், செப். 19

வவுனியா நகரப் பகுதி இராணுவ முகாம்களில் இருந்து மீண்டும் ஷெல் தாக்குதல்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மக்கள் குடியிருப்புகளை நோக்கி இடைக்கிடை இந்தத் தாக்குதல்கள் நடத்தப்பட்டு வருகின்றன. [இ-6]

## திலீபனின் தாகம்

தமிழீழத் தாகத்தால் தண்ணீரும் குடியாமல்
ஊண் இன்றி உடலும் சோர்ந்து
பட்டினி கிடந்து பத்தியம் காத்து
எம்மை பைத்தியம் ஆக்கி விட்டு
பறந்து விட்டாயே அண்ணா
பரமனடி சேர்ந்து விட்டாய்

நஞ்சு தின்று செத்தாலும் நாவரண்டு மாண்டாலும்
ஈழத்து வேங்கைகளோ மண்டியிட மாட்டாது
சாத்வீக போராட்டம் தெரியுமென்று எங்களுக்கு
காட்டி விட்டுப் போனாரே திலீபணண்ணா
காவியமும் படைத்து விட்டார்
கதையெழுத வைத்து விட்டார்
மருத்துவராய் படிப்பவர்க்கு
தன்னுடலை அளிக்கச் சொன்னார்.

கற்பூரம் கண்களைப் பொத்திக் கொண்டது
மெழுகுவர்த்தியோ மௌனமானது
சந்தனக்கட்டை சரிந்து வீழ்ந்தது
சாம்பிராணியும் உன் சரித்திரம் சொல்லுது
இமயம் உன்னை நிமிர்ந்து பார்க்குது
பாரதம் உன்னிடம் பாடம் படிக்குது.

நல்லை மண் உன்னை மண்டியிட்டு வணங்குதையா
வல்லை வெளி உனை நினைத்து
வாய் விட்டு கதறுதையா
உன் ஊராம் ஊரெழுவும்
உயிர் விடப் பார்க்குதையா
கண்கள் எல்லாம் நீர் நிறைந்து குளமாகி நிற்குதையா
கட்டாயம் உன் தமிழ்த் தாகம் தீருமையா
முற்றாக நாம் தமிழீழம் காண்போமையா.

## யாழ். முஸ்லிம் வட்டாரத்தில் நிவாரண அனுமதிப்பத்திரம்

யாழ்ப்பாணம், செப். 19

யாழ். முஸ்லிம் வட்டாரப் பகுதி மக்களுக்கான நிவாரண அனுமதிப்பத்திரங்கள் பெர்மிட் வழங்கப்பட்டு வருகின்றன.

அத்துடன் கடந்த ஜூன் மாதத்துக்கான பொதுசன உதவிப்பணமும் வழங்கப்பட்டுவருவதாகவும் உரியவர்கள் தொடர்பு கொள்ளுமாறும் இப்பகுதி கிராமசேவை அலுவலர் எம்.எஸ். ஜனூஸ் கேட்டுள்ளார் (இ 5)

## மௌன ஊர்வலம்

தியாகச்சுடர் திலீபனின் மூன்றாம் ஆண்டு நிறைவையொட்டி பளை வட்ட அவையினரால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள தொடர் உண்ணாவிரதத்தையொட்டி முகமாலை, இத்தாவில் சிற்றூர் அவையினர் இன்று 19 ஆம் திகதி மௌன ஊர்வலம் நடத்துகின்றனர். [இ 117]

மனித உரிமை மீறல் தொடர்பான

## படங்களை அரசு கைப்பற்றியது சட்டவிரோதம் என்கிறார் சிறிமா

கொழும்பு, செப். 19

சுதந்திரக்கட்சி எம். பி. மஹிந்த ராஜபக்ஷவிடம் இருந்து மனித உரிமை மீறல் சம்பந்தமான படங்கள் மற்றும் ஆவணங்களை கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வைத்து நீர்கொழும்பு உதவி பொலீஸ் அதிபர் கைப்பற்றியது சட்ட விரோதமானது.

எதிர்க்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவினால் நேற்று நாடாளுமன்றத்தில் விடுத்த அறிக்கையில் மேற் கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜெனிவாவில் நடைபெறும் ஐ நா. மனித உரிமை மீறல் ஆணைக்குழுவின் முன் சமர்ப்பிப்பதற்காக திரு. மஹிந்த ராஜபக்ஷ சம்பந்தப்பட்ட படங்களையும் ஆவணங்களையும் எடுத்துச் சென்றார் என்றும்— அவற்றைக் கைப்பற்றியது சட்ட விரோதமான நடவடிக்கை என்றும்—

இச் சம்பவம் பற்றி விசாரிக்க விசேட நாடாளுமன்றக் குழு ஒன்று நியமிக்கப்பட வேண்டும் என்றும் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா தனது அறிக்கையில் கேட்டுக் கொண்டார்.

பாதுகாப்புத் துணை அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினா அதற்குப் பதிலளிக்கையில், மனித உரிமை ஆணைக் குழுவின் முன் சமர்ப்பிப்பதற்கு போலி ஆவணங்களை திரு. ராஜபக்ஷ கொண்டு செல்கிறார் என்ற தவலைத் தொடர்ந்தே, அவை விமானநிலையத்தில் வைத்துக் கைப்பற்றப்பட்டன என்று தெரிவித்தார்.

கைப்பற்றப்பட்ட ஆவணங்கள் உண்மையானவையா என்பதுபற்றி விசாரணை செய்யப்படுவதாகவும் அப்படி உண்மையானவை என்று காணப்பட்டால் அவை திரு. ராஜபக்ஷவிடம் திருப்பி ஒப்படைககப்படும் என்று அவரிடம் உதவி பொலீஸ் அதிபர் குடாஹெட்டி கூறியிருப்பதாகவும் அமைச்சர் ரஞ்சன் விஜேரத்னா தெரிவித்தார். (இ-எ)

## நவராத்திரி விரதம்

முச்சத் திகள் விளங்கும் முன்னுநவ ராத்திரியை
இச்சையுடன் இங்குள்ளோர் நோற்றுவரேல் -
நிச்சயமாய்
உச்ச நிலையெய்தி உண்மையாய் உய்வெய்தி
அச்சமற வாழுவரே ஆம்.

வீரத்தை ஞாலத் தோர்க்கு
வழங்கிடும் துர்க்கை யாளும்
வாரமாய்த் தனத்தை அள்ளி
வழங்கிடும் லக்மி யாளும்
பாரவர் சிறக்கக் கல்வி
வழங்கிடும் காயத்ரி யாளும்
சீரமை வாழ்வை நல்கச்
சிந்தித்து வணங்கு வோமே!

— கவியரசு வெண்பாமணி முருகசூரியன்

[இன்று நவரா[illegible] இக்கவிதை பிரசுரமாகிறது.]

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# நான்காவது நாளாக நேற்று தியாகி திலீபனுக்கு அஞ்சலி!

யாழ்ப்பாணம், செப் 19

நான்காவது நாளாக நேற்றும் தியாகி திலீபனுக்கு குடாநாடு முழுவதும் அஞ்சலி செலுத்தப்பட்டது.

குடாநாட்டில் பரவலாக - சந்திகள் தோறும் - அலங்கரிக்கப்பட்ட மேடைகளில் தியாகி திலீபனின் உருவப் படங்கள் வைக்கப்பட்டிருந்தன.

பிரதான வீதிகளில் தியாகி திலீபனின் சுவரொட்டிகள் பல விதங்களிலும் ஒட்டப்பட்டிருந்தன. புரட்சிப் பாடல்களும், விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவர்களின் உரைகளும் சந்திகளில் ஒலிபரப்பப்பட்டன.

கிராமங்கள்தோறும் தியாகி திலீபனின் உருவந்தாங்கிய - மலர்மாலைகளால் அலங்கரிக்கப்பட்ட தேர்களும் உலா வருகின்றன.

திலீபனின் உருவத்தின், பின்புறத்தில்யாழ் கோட்டை காணப்படுகின்ற வகையில் அமைந்துள்ள சுவரொட்டிகள் பரவலாக பல இடங்களிலும் ஒட்டப்பட்டிருந்தன.

பொது மக்களினாலும் திலீபனுக்கு அஞ்சலி செலுத்தி சுவரொட்டிகளும், துண்டுப் பிரசுரங்களும் வெளியிடப்பட்டு வருகின்றன. (உ-7)

# ஊரடங்கு நீக்கம்; முரணான அறிவிப்புகள்

யாழ்ப்பாணம், செப். 19

யாழ்ப்பாணக் குடாநாட்டில், யாழ். உதவி அரசாங்க அதிபர் பிரிவு தவிர்ந்த ஏனைய பகுதிகளிலும் -

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களின் சகல பகுதிகளிலும் நேற்றுக் காலை ஆறு மணிமுதல் ஊரடங்குச் சட்டம் நீக்கப்பட்டிருப்பதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்தது.

ஆனால் திங்கட்கிழமை இரவு தமிழ், ஆங்கில வானொலிச் செய்திகளில் "யாழ்ப்பாணம் உதவி அரசாங்க அதிபர்பிரிவில்நாளை (18 ஆம் திகதி) காலை ஆறு மணிக்கு ஊரடங்குச் சட்டம் நீக்கப்படும் என்றுபாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது" என்று கூறப்பட்டது

திங்கட்கிழமை இரவுக்கும், செவ்வாய்க்கிழமை காலைக்கும் இடையில் பாதுகாப்பு அமைச்சு தனது முடிவை முன்னுக்குப் பின் முழு முரணாக மாற்றிக்கொண்டதால் குடாநாட்டில் ஊரடங்கு நீக்கம் குறித்து மக்கள் மத்தியில் பெரும் குழப்பநிலை ஏற்பட்டது.

மின்சாரமும் இல்லை, பற்றறிகளும் இல்லை என்பதால் பலரும்வீடுகளில்நேரில் தாமே வானொலிச் செய்திகளைக் கேட்கமுடியாத நிலையில் -

குடாநாட்டில் யாழ். உதவி அரசாங்க அதிபர் பிரிவு தவிர்ந்த ஏனைய பகுதிகளில் ஊரடங்கு நீக்கப்பட்டதாக நேற்றுக்காலை வானொலியில் அறிவிக்கப்பட்டதாகமற்றவர்கள் கூறியது சரிதானா என்று சந்தேகம் தெரிவிக்க முடியாத நிலையில்-இருந்தனர்.

நேரத்துக்குநேரம் பாதுகாப்பு அமைச்சு தனது முடிவுகளை மாற்றுவது தமிழர்களை கொன்றுவிட்டு ஊரடங்கில் பழியைச் சுமத்திவிடவா என்று பொதுமக்கள் கேட்கிறார்கள்.

இதேவேளை -

உணவுவிநியோகம்அத்தியாவசிய பொருள்களை எடுத்துச் செல்வது ஆகியவற்றுக்குவசதியாகவே மூன்று மாவட்டங்களிலும் ஊரடங்கு நீக்கப்பட்டதாக பாதுகாப்பு அமைச்சு கூறியதாகவும் நேற்று அறிவிக்கப்பட்டது. (அ)

## மரண அறிவித்தல்

### சுப்பிரமணியம் சண்முகநாதன்

[கல்வி அதிகாரி]

வேலணையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், கந்தர்மடத்தை வசிப்பிடமாகக் கொண்டவருமாகிய சு. சண்முகநாதன் [கல்வி அதிகாரி - வேலணை] 18 09-1990 செவ்வாய்க்கிழமை இயற்கையெய்தினார்.

அன்னார் சுந்தரம்பிள்ளை சுப்பிரமணியம், காலம் சென்ற தங்கம்மாவின் ஏக புத்திரனும், அகிலத்திரு நாயகியின் அன்புக் கணவரும், குமரன், காந்தன், சயந்தன், வரதன் ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், திருமதி புனிதவதி ஆறுமுகம், திருமதி திருநாவுக்கரசு திலகவதி, செல்வி சு. பத்மாவதி, திருமதி கணேசலிங்கம் கமலாதேவி, திருமதி குணரத்தினம் லக்சுமிதேவி, திருமதி மகேந்திரநாதன் தயாநிதி ஆகியோரின் சகோதரனும், திரு த. சிவபரம்சோதி, திருமதி கு. அரங்கநாயகி ஆகியோரின் மைத்துனரும், Dr. த. யசோதரா, Dr S. சசிதரா, வைத்தியக் கல்லூரி மாணவன் A. சபேசன், T. முரளீதரன் [சவுதி], T. கிரிதரன், T. ஸ்ரீதரன் [Quick Star Photo]. T. கலாதரா, T. வசுந்தரா, T சுமித்ரா, K. சிவானுஜா, K. சேயோன், K. சிவப்பிரியா, M. சுபேந்திரன் ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 91/18, இந்து மகளிர் ஒழுங்கை, கந்தர்மடம் இல்லத்தில் இருந்து கொக்குவில் மயானத்திற்கு 19-09-1990 புதன்கிழமை காலை 10-00 மணியளவில ஈமக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உறவினர்களும், நண்பர்களும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

தந்தை, மனைவி, பிள்ளைகள், சகோதரிகள், மைத்துனர், மருமக்கள்.

[14225]

## ம. எண்ணெய் விலை வீழ்ச்சி

யாழ்ப்பாணம், செப். 19

யாழ். குடாநாட்டில் மண் எண்ணெய் விலை வீழ்ச்சி அடைந்துள்ளது

மண்எண்ணெய் லீற்றர் ரூபா 50 வரையில் நேற்று விற்பனை செய்யப்பட்டது. [இ-6]

## அரச அதிபர் இன்று வருவார்

யாழ்ப்பாணம், செப் 19

இன்று நண்பகல் பருத்தித்துறைத் துறைமுகத்துக்கு வரும் "லங்காசிறி" கப்பலில் யாழ். அரசாங்க அதிபர் திரு. அ. ரன் அல்பிரட்டும் வருகிறார்.

கடந்தவாரம் கொழும்பு சென்றிருந்த அவர் அங்கு அகதிகள் நிவாரணம் சம்பந்தமான உயரதிகாரிகளின் கூட்டங்கள் பலவற்றில் கலந்து கொண்டதாக அறியப்படுறது. (உ-7)

## வயாவிளானில் ஷெல்லினால் இருவர் காயம்

யாழ்ப்பாணம், செப். 19

படையினரின் ஷெல் தாக்குதலுக்கு உள்ளாகி இருவர் படுகாயமடைந்தனர்.

நேற்று செவ்வாயன்று வயாவிளானில் இச்சம்பவம் நடந்தது.

காயம் அடைந்தவர்களில் ஒருவர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சுப்பிரமணியம் பிரபாஸ்கரன் [வயது 24].

அவருடன் இனந்தெரியாத மற்றும் ஒருவர் தலையில் ஏற்பட்ட காயத்தினால் நினைவிழந்த நிலையிலுள்ளார்.

இருவரும் மானிப்பாய் யாழ் போதனா வைத்திய சாலைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். [இ-15]

## கப்டன் ஜெயா வீரமரணம்

யாழ்ப்பாணம், செப். 19

மன்னார் விடத்தல் தீவில் மோதல் ஒன்றில் காயமடைந்த விடுதலைப் புலிகள் இயக்கப் போராளி கப்டன் ஜெயா (த. தேவசகாயம் பெரேரா-நொச்சிக்குளம்,உயிலங்குளம்)கடந்த ஞாயிறுவீரமரணமடைந்தார். (உ-5)

## நேற்று மாலை ஷெல் தாக்கி இருவர் காயம்

யாழ்ப்பாணம், செப். 19

நேற்றுமாலை 5 30 மணியளவில் நடத்தப்பட்ட ஷெல் வீச்சில் யாழ். ஐந்து சந்தி- மானிப்பாய் வீதியிலும் இருவர் காயமதைந்தனர்.

ஓட்டுமடத்தைச் சேர்ந்த நடராசா தமிழ்ச்செல்வன் (வயது 32) என்பவரும், மற்றும் பெயர் தெரியாத முஸ்லிம் ஒருவருமே காயமுற்றனர்.

அப்பகுதியில் கடை ஒன்றும் சேதமடைந்தது. (ஒ-15)

### கொழும்புத்துறை...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

மாலா கனகசபை [வயது 16], தேவதத்துவம் சுகுமார் [வயது 35], அவரது மகன் சுகுமார் செல்வம் [வயது 11], தம்பு சிவானந்தராசா [வயது 18], சிவபோகமலர் தம்பு [வயது 20], மற்றும் குயின் மேரி ஜூலியஸ் [வயது 24], மேர்ஜி ஸ்டீபன் [வயது 25], மனுவேல் அன்ரனி றோசாரி [வயது 58] ஆகியோர் காயமடைந்து மானிப்பாய் யாழ். போதனா வைத்தியசாலைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (இ-15)

# இன்று நவராத்திரி ஆரம்பம்

யாழ்ப்பாணம், செப் 19

இன்று நவராத்திரி விரதம் ஆரம்பமாகிறது.

தொடர்ந்து 9 நாட்கள் அனுஷ்டிக்கப்படும் இந்த விரதத்தில் முதல் 3 நாட்கள் வீரம் வேண்டி சக்தியையும், அடுத்த 3 நாட்கள் செல்வம் வேண்டி லஷ்மியையும், இறுதி 3 நாட்கள் கல்வி வேண்டி கலைமகளையும் இந்துக்கள் வழிபடுவர். (இ-6)

# ராணுவக் காவல் அரண் மீது வவுனியாவில் தாக்குதல்

வவுனியா பூந்தோட்டம் குடியிருப்புப் பகுதியில்அமைந்திருந்த இராணுவக் காவல் அரண்மீது விடுதலைப் புலிகள் கடந்த வெள்ளியன்று பெரும் தாக்குதல் ஒன்றை நடத்தினர்

இந்தத் தாக்குதலினால் காவல் அரண் முற்றாகச் சேதமடைந்ததாகவும் —

இராணுவத் தரப்பில் உயிரிழப்புகள் ஏற்பட்ட போதிலும் முழுச் சேதவிவரம் தெரியவில்லை என்றும் விடுதலைப்புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன. (உ)

# பிரதம தபாலகப் பணிகள் நேற்று முதல் ஆரம்பம்

## ஊழியர்களுக்கு அழைப்பு

ஊரடங்குச் சட்டம் நீக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து யாழ் பிரதம தபாலகம் நேற்று செயற்படத் தொடங்கியது.

இன்றுமுதல் வழமைபோல் தபால்நிலையப்பணிகள் நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ் பிரதம தபால் நிலைய ஊழியர்களை இன்று புதன் காலை 8-00மணிக்கு யாழ் இந்துமகளிர் கல்லூரிக்கு வருகைதருமாறு யாழ் பிரதம தபால்அதிபர் திரு. எஸ். பரராஜசிங்கம் அழைப்புவிடுத்துள்ளார்.

தபால்விநியோகமும் இன்று முதல் ஆரம்பமாகும்.

குருநகர், பாஷையூர், கொட்டடி, முஸ்லிம் வட்டாரம், பிரதான வீதி, யாழ் பஜார். ஸ்ரேசன்வீதி, மாட்டின்வீதி ஆகிய இடங்களில் உள்ளவர்களுக்குரிய கடிதங்கள்மாத்திரம் யாழ் இந்து மகளிர் கல்லூரியில் வைத்து விநியோகிக்கப்படும்என்றும் பிரதம தபாலதிபர் தெரிவித்துள்ளார். (ஒ-7)

# ஈழத் தமிழரைக் காப்பாற்ற நடவடிக்கை எடுக்குக!

## திருநாவுக்கரசு கோரிக்கை

சென்னை, செப். 19

இலங்கைத் தமிழரைக் காப்பாற்ற ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுக்கும்படி- மத்திய அரசை வற்புறுத்துமாறு - முதலமைச்சர் கருணாநிதியை அ. தி மு. க. போட்டிப் பிரிவின் தலைவரான திரு. எஸ் திருநாவுக்கரசு கோரியுள்ளார்.

இது சம்பந்தமாக திரு. திருநாவுக்கரசு விடுத்த அறிக்கை ஒன்றில், இந்திய மீனவர்களை இலங்கை கடற்படையினர் சுட்டுக்கொன்றதையும் கண்டித்தார்.

இந்திய மீனவர்களைக் காப்பாற்ற கரையோரக் காவல் படையின் நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட வேண்டும் என்றும் திரு. திருநாவுக்கரசு கேட்டுக்கொண்டார். (ஒ-எ)

## சடலங்கள் இடையே ஆயுதங்கள்

அண்மையில் யாழ் கோட்டைப் பகுதியில் இடம்பெற்ற மோதல்களின் பேது உயிரிழந்த இராணுவச் சிப்பாய்களின் சடலங்களிடையே இருந்து மேலும் பல ஆயுதங்கள் மீட்கப்பட்டு வருவதாக விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன.

இவ்வாறு கடந்த ஞாயிறன்று ஏ. கே. எல். எம். ஜி ஒன்று மீட்கப்பட்டதாகவும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. [உ-5]

## அற்லான்ராவில் ஒலிம்பிக்!

சென்னை. செப். 19

நூற்றாண்டு(1996)ஒலிம்பிக் போட்டியை நடத்த அமெரிக்காவின் 'அற்லான்ரா' நகரம் தெரிவு செய்யப்பட்டுள்ளது. [ஒ-5]

## நீர்ப்பாசன ஊழியர் கூட்டம்

யாழ்ப்பாணம், செப்.19

கிளிநொச்சி நீர்ப்பாசனத் திணைக்களத்தில் பணிபுரியும் சகல தர ஊழியர்களையும் இன்று புதன்கிழமை காலை 11 மணிக்கு திருநெல்வேலி சிவன்கோவில் வீதியில் உள்ள, திரு. மோகனின் இல்லத்தில் சமுகம் கொடுக்குமாறு நீர்ப்பாசன பொறியியலாளர் கேட்டுள்ளார். (அ-6)

### நேற்று...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பகுதியில் பொதிகளைப் போட்டபடி இருந்தது.

மாலை 5 மணியளவில் வந்த சகடை விமானம் நகரின் பல பகுதிகளிலும் எட்டுக் குண்டுகளை வீசிவிட்டுச் சென்றது.

பிற்பகலிலும் - இரவிலும் பயங்கரமான பீரங்கி, ஷெல் வீச்சும் நடத்தப்பட்டன. [ஒ]

### அரசாங்கத்தின்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யில் குற்றஞ்சாட்டி உள்ளது.

கடந்த திங்கள் விடுத்த அந்த அறிக்கையில், நாட்டின் தென்பகுதியில் அரசுப் படைகள் நடத்திய இது போன்ற பயமுறுத்தல் நடவடிக்கைகளால் ஆயிரத்துக்கு மேற்பட்டோர் கொல்லப்பட்டனர்; மேலும் ஆயிரத்துக்கு அதிகமானோர் காணாமற் போனார்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இது போன்ற பயமுறுத்தல் நடவடிக்கைகளுக்கு வடக்கு-கிழக்கு பகுதியிலும் நூற்றுக் கணக்கானோர் பலியாகி உள்ளனர் என்றும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

பெரும்பாலான கொலைகளில் சீருடை அணிந்தவர்களும் சீருடை அணியாதோரும் ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியுடன் தொடர்பு கொண்ட கொலைப் படையினரும் சம்பந்தப்பட்டுள்ளனர் என தகவல் கிடைத்திருக்கிறது என்றும் சர்வதேச மன்னிப்புச் சபை தனது அறிக்கையில் கூறியுள்ளது. (இ-எ)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி 229/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 19-09-1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org